# தென்றல்

கிழமை இதழ்


ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஐப்பசி 27 (12-11-'60). சனிக்கிழமை | இதழ் 22


# தேர்தல் வரும் பின்னே--
# திட்டம் வரும் முன்னே.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டு அரசியலில் மிகவும் முக்கியமான அங்கம் வகித்து வருவதை நாளுக்கு நாள் உறுதியாக உணர்ந்து வருகின்ற ஊராள்வோர்கள், தங்களின் கூலிப் படைகளைத் தூண்டிவிட்டு கழகத் தோழர்களைத் தாக்கித் துளைத்திடத் திட்டமிட்டு சதி செய்து வருகிறார்கள். 1962-ம் ஆண்டில் நடைபெற இருக்கும் மூன்றாவது பொதுத் தேர்தலில் கழகம், காங்கிரசுக் கட்சிக்கும் அதனுடைய 'கன தனவான்களுடைய பேராசைகளுக்கும் சரியான முற்றுப் புள்ளி வைக்கக் காத்திருக்கிறது என்பதையும் நன்கு கணித்திருக்கிறார்கள். சுதந்திராக் கட்சியின் அமைப்பாளர் திரு. இராசகோபாலாச்சாரியார் முன்னேற்றக் கழகத்தின் முழு வளர்ச்சியைக் கண்டு சென்ற தேர்தலின்போதே திகைத்துப் போனவர். அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் பாதையைக கண்டு வியப்புற்றவர். அவர் தம் அறிவாற்றலைக் கண்டு களித்ததுமட்டுமல்ல அவரே சட்ட மன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவராகவும இருக்க வேண்டுமென்று விரும்பித் தன் ஆவலை வெளியிட்டுக் காட்டியவர்! அவரும் அண்மையில் கேரளத் தலைநகராம் திருவனந்தபுரத்தில் பேசும்போது தான்சார்ந்த சுதந்திராக்கட்சி முன்னேற்றக் கழகத்துடன் தேர்தல் உடன்பாடுகள் செய்துகொள்ளக் கூடும் என்ற கருத்தினை அறிவித்துள்ளார். சுதந்திராக் கட்சியின் வடநாட்டுத் தலைமையும் மற்ற கட்சித் தலைவர்களும் ராசகோபாலருடைய எண்ணத்தையே ஒப்புவர் என்று பலரும் கருதுகின்றனர். தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியும் தன்னுடைய கோவை மாநாட்டில் முன்னேற்றக் கழகம் குறித்து முக்கியமான தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியுள்ளது. காங்கிரசு ஆட்சிக்கு ஒரு முடிவு கட்ட சுதந்திராக் கட்சி, திராவிடர் கழகம், தவிர்த்த மற்றக் கட்சியினர் மட்டும் ஒரு ஜனநாயக ஒற்றுமையை உருவாக்க வேண்டும என்ற செய்தியைத் தந்துள்ளனர். அவர்கள் கருத்து, "தி. மு. க.வின் நாட்டுப் பிரிவினை லட்சியத்தில் அதற்கும் இதர கட்சிகளுக்கும் உடன்பாடில்லை என்பது தெரிந்ததே. ஜனநாயகத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றாகச் சேர்ந்து தேர்தலில் காங்கிரசுக் கட்சியை எதிர்ப்பதற்கு தி. மு. க.வின் பிரிவினை லட்சியம் தடையாக இருக்கும் நிலை உண்டாக்கப் படக்கூடாது. நாட்டுப் பிரிவினை லட்சியத்தைத் தி. மு. க. விட்டு விட வேண்டுமென்பது இதன் பொருளல்ல" என்பதாகும்.




இதுதான்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்!

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய பிரிவினை லட்சியத்தையும், வடநாட்டு எதிர்ப்புக் கொள்கையையும் பொதுத் தேர்தல் நேரத்தில் வலியுறுத்துவது எதிர்க் கட்சிகளின் கூட்டணிக்குத் தடையாகிவிடும் என்று கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது. எனவே அதனை ஒதுக்கி வைத்துவிட வேண்டும், ஆனல் பிரிவினை லட்சியத்தை விட்டுவிட வேண்டும் என்பது அதன் பொருளல்ல என்றும் தீர்மானம் விளக்கம் தருகிறது. கம்யூனிஸ்டுக் கட்சியானது 1952-ம் ஆண்டுத் தேர்தலில் இதே கருத்தினைத்தான் தெரிவித்தது. 1957-ம் ஆண்டுத் தேர்தலிலும் இதனையேதான் கூறி விவாதித்தது. 1962-ம் ஆண்டுத் தேர்தலுக்கும அதே பழைய செய்தியினைத்தான், கழகத்தின் மூல லட்சியத்தினை மறந்துவிட வேண்டுமென்ற வேண்டுகோளை அனுப்பியுள்ளது. அவர்களுடைய கட்சியின் கொள்கைப் பிடிப்புகளும் அமைப்பு முறைகளும் எத்தனையோ முறைகள் எத்தனையோ பிரச்னைகளுக்காக உருமாறியிருக்கின்றன. ஆனல் திராவிடப் பிரிவினையில் மட்டும உறுதியாக நிலை பெயராமல் நிற்கின்றன. முன்னேற்றக் கழகத்தினை விட்டு விடுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறார்களே தவிர தங்களது கட்சி, பிரிவினை லட்சியத்தை சில வகைகளிலேனும் வரவேற்கிறது என்று தவறியும் தெரிவிக்கவில்லை. முன்

**கூடலரசன்**

(7-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை:

# அந்தக் கொள்ளை!

வாசுதேவநல்லூர்—நெல்லை மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர். மேற்குத் தொடர்ச்சிமலை அடிவாரத்தில் அமைந்த வளங்கொழிக்கும் இடம் அது.

ஒருநாள் மாலை 4 மணி இருக்கும். இடதுகையில் பெரிய டிபன்கேரியரும், வலதுகையில் ஆறடி நீளமுள்ள தடியும் எடுத்துக்கொண்டு 28 வயது மதிக்கத்தகுந்த வாலிபன் ஒருவன் வேகமாக மலையை நோக்கி மேற்கு முகமாக நடந்துகொண்டிருந்தான்.

அவனுடைய பரந்தமார்பும், திரண்ட தோள்களும், திண்ணிய உடற்கட்டும், நடுத்தர உயரமும். அவனை "உடற் பயிற்சியால் உரமேறியவன்" என்று, அறிவித்துக்கொண்டிருந்தன.

அவன், ஒரு பிடிப்பான — விலையுயர்ந்த பனியனை அணிந்து, அதன் கீழ்ப்பாகத்தை வேட்டிக்குள் விடுத்து. அதன்மேல், தடித்த பெரிய தோல் 'பெல்டை' இறுகப் பூட்டியிருந்தான்!

அந்தப் 'பெல்டு' பனியனையும் உடுத்திய வேட்டியையும் இணைத்துக் கொண்டு பளபளப்பாக இருந்தது.

அந்தப் பெல்டு பூட்டியிருந்த இடுப்பில் முக்கால் அடி நீளமுள்ள வேல் ஒன்றை துணியில் சுற்றிச் செருகி இருந்தான், அந்த வேலின் காம்பில் கழற்றிப் பூட்ட வசதியான மறை இருந்தது. அந்த மறைக்கு ஏற்ற 'நட்'டை இரும்புப் பூணுக்குள் பொருத்தி. அந்தப் பூண் அவன் கைத் தடியின் நுனி ஒன்றில் பலமாக ஏற்றப் பட்டு இருந்தது.

ஆதலால், அவன் கையிலிருந்த தடி வெறுந்தடியல்ல—அவன் விரும்பினுல்—அது வேலாயுதமாக உருப் பெற்றுவிடும்!

இந்தக் கோலத்துடன் சென்ற அவன் வேகமாக மலையின் கணவாய் ஒன்றில் நுழைந்தான். அந்தக் கணவாய் நுழையுமிடத்தில் 300 அடி அகலமுள்ளதாக இருந்து, போகப் போக ஒடுங்கி 1000 அடி தூரம் போனதும் 7 அடியாக ஓரிடத்தில் நெருங்கிவிட்டது.

அந்த இடத்தில் சுனை ஒன்று 'சல சல' என்ற சத்தத்துடன் வடக்கு மலையிலிருந்து துள்ளிப் பாய்ந்து, எதிரே தெற்குமலையின் அடியிலிருந்த குகையில் நுழைந்து சென்றது.

யுகம் யுகாந்தமாக அந்தக் குகையில் நுழைந்து செல்லும் சுனைநீர் அத்தனையும் எங்குதான் செல்கின்றனவோ—எவருக்கும் தெரியாது!

வேகமாக வந்த அந்த வீர வாலிபன், சுனை அருகில் வந்ததும் சுற்றிலும் ஒருமுறை கண்களைச் செலுத்தினுன்.

அடர்ந்த செடிகளும் கொடிகளும், அவைகள் அசைந்தாடும் ஓசையும் அதனிடையே தேன்குடிக்கத் திரியும் வண்டுகளின் ஒலியும் தவிர, ஆளரவம் எதுவும் இல்லை.

அந்த வாலிபன் இடதுகையிலிருந்த டிபன்கேரியரைக் கீழே வைத்துவிட்டு, இடையில் செருகி இருந்த வேலை எடுத்து கைத்தடியின் நுனியில் திருகி ஏற்றினுன். அந்த வேல் இருபுறமும் கூர்மையுடன் பளபளவென்று ஒளி வீசிக்கொண்டு கண்டோர் அஞ்சத்தக்க விதமாக இருந்தது.

வேலை வலதுகையில் ஏந்திக் கொண்டு. மீண்டும் இடதுகையில் டிபன்கேரியரை எடுத்துக்கொண்டு சுனைநீர் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்த குகைக்குள் நுழைந்தான்.

அந்தக் குகை 3 அடி அகலமும் 8 அடி உயரமும் கொண்டதாக இருந்தது. முதலில் குகையில் மங்கிய வெளிச்சம் இருந்தது. முழங்காலளவு தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

தண்ணீருக்கடியில் கூழாங்கற்களும் மணலும் கலந்து நடப்பதற்கே சங்கடமாக இருந்தது.

அவன், 50 அடி தூரம் போவதற்குள் குகை முற்றும் இருண்டதாக இருந்தது.

அவன் இருட்டைப்பற்றிக் கவலைப் படாமல் விரைந்து சென்றதைப் பார்க்கும்போது, அவன் அடிக்கடி அந்தக் குகைக்குள் போய் வந்து பழக்கமுடையவன் என்று எவரும் சொல்லி விடமுடியும்!

அவன் நேராக தண்ணீருக்குள் 150 அடி வரை நடந்தான்.

அங்கே குகைக்குள் ஒரு முச்சந்தி இருந்தது. அதிலிருந்து தண்ணீர் இடதுபுறமாகத் திரும்பி ஓடியது. வலதுபுறமாகத் திரும்பி நடந்தான் அந்த வாலிபன்.

அவன் இப்போது தண்ணீரில் நடக்கவில்லை. வர வர மேடாக இருந்த குகைக்குள் நடந்தான். கொஞ்சதூரம் வந்ததும் எதிரே சூரிய வெளிச்சம் தோன்ற ஆரம்பித்தது.

இப்போது அவன் குகையைக் கடந்து மலையின் உட்பகுதிக்கு வந்திருந்தான் வீடுகளில் உள்ள தொட்டி முற்றம் போல் அந்தப் பகுதி இருந்தது! இயற்கை அமைத்த கோட்டை அது! சுற்றிலும் வானளாவிய மலைகள்! நடுவில் கண்ணுக் கெட்டிய தூரம் சமவெளி! பச்சைப் பசேல் என்ற செடிகளும் கொடிகளும் பெரிய மரங்களும் நிறைந்து பயங்கரமான அமைதியுடன் ஒருவிதக் கம்பீரம் நிறைந்த இடமாக இருந்தது அது!


ஜெ.

மந்திகள் கூட்டமாக விளையாடிக் கொண்டிருந்தன. எங்கிருந்தோ ஒரு பறவை பாடுகின்ற சத்தம் கேட்டது. பிறகு அந்தச்சத்தமும் அடங்கிவிட்டது.

அந்த அமைதியைக் குலைத்துக் கொண்டு அந்த வாலிபன் புதர்களின் ஊடே நுழைந்து தூரத்திலிருந்த பலாமரத்தின் கீழ் வந்து சேர்ந்தான்.

வந்ததும் டிபன் கேரியரைக் கீழே வைத்துவிட்டு வாயால் ஒரு 'சீற்றை' யடித்தான்.

எங்கிருந்தோ எதிர் ஒலி போல் பதில் சீற்றை ஒலி ஒன்று கேட்டது.

சிறிது நேரத்தில் புதர்களுக்கிடையே ஒருவன்: "என்னய்யா சடையாண்டி இவ்வளவு நேரம்?' என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

"அண்ணே, கள்ளச் சாராய வேட்டைக்காக ஊருக்குள்ளே போலிசுக் காரங்க திரியராங்க. அவங்க கண்ணுலே படாம வந்து சேர இத்த நேரமாச்சு! சோறு கொண்டாந்திருக்கேன் சாப்பிடண்ணே முதல்லே. அப்புறம் பேசிக்கல்லாம்" என்ருன் சடையாண்டி.

வந்தவன், சடையாண்டி கொண்டு வந்த டிபன் கேரியரை எடுத்துக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். சடையாண்டி பலாமரத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு சுரைக் குடுக்கையை எடுத்துக்கொண்டுபோய், குகைக்குள் ஓடிக்கொண்டிருந்த சுனைத் தண்ணீரை, குடுக்கை நிறைய முகந்து கொண்டு வந்தான்.

★

சிங்க நல்லூர் வீரபாண்டியத்தேவன் என்ருல் தமிழ் நாட்டிலேயே 30–40 பேருக்குத்தான் ஆளைத் தெரியும்! ஆனுல், அவன் பெயரைக் கேள்விப் படாதவர்கள் இருக்க முடியாது!

1955 முதல் தமிழ் நாட்டிலுள்ள ஊர்க்காவல் துறையினருக்கு தலைவேதனையாக இருந்து வந்தான்—வீரபாண்டியத் தேவன்!

கன்னியா குமரியிலிருந்து திருவேங்கடம் வரையுள்ள பெரிய நகரங்களில் உள்ள பெரும் பணக்காரர்கள் அனைவரும்வீரபாண்டியனுக்குக்கப்பம்செலுத்தியவர்கள்தான் என்ருல் போதாதா?

இதுவரை 25 கொலையிலும், நூற்றுக்கணக்கான கொள்ளையிலும் சம்பந்தப்பட்டவன், வீரபாண்டியத்தேவன் என்று, ஊர்க்காவல் துறையின் ஆவணங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. ஆனுல், வீரபாண்டியனுடைய அங்கமச்சஅடையாளங்களோ, —கைகால்களின் இரேகை அடையாளங்களோ—எதுவும் இது வரை ஊர்க்காவலருக்குக் கிடைக்கவில்லை.

அதற்குக் காரணம்; அவன் கொலை கொள்ளைகளுக்குச் செல்லும்போதெல்லாம் கையில் ஒருவித மெழுகைப் பூசி இரேகைகளை மறைத்துவிடுவதுடன், கால்களில் நன்ருகத் தேய்ந்த இரப்பர் பூட்சுகளை அணிந்து கொள்வதுந்தான்!

ஆனுல், அந்த மெழுகுபடிந்து இரேகை உருக்குலைந்த அடையாளங்களை ஊர்க் காவல் துறையினர் பல இடங்களில் கண்டுபிடித்து ஆராய்ச்சியால் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தனர்.

இப்படிப்பட்ட நேரத்தில்தான் கோயமுத்தூர்க் கொள்ளை நடந்தது.

கோயமுத்தூர் பெரியகடை வீதியிலுள்ள 3 மாடிக் கட்டிடம் ஒருநாள் வீரபாண்டியனின் இலக்காகிவிட்டது.

அவ்வளவுதான்! ஒருநாள் இரவில் அதன் உள்ளே போய் இரும்புப் பெட்டியைத் திறந்தான் வீரபாண்டியன்! கட்டுக்கட்டாக 100 ரூ நோட்டுகள்! 50,000 ரூபாய் கொண்ட கட்டு ஒன்றை எடுத்துக் கொண்டுவெளியேறினுன் வீட்டிலிருந்து அவன் வெளியேறும்வரை யாரும் வரவில்லை—ஏன் என்று கேட்கவில்லை! அதைவிட ஆச்சரியம் அந்தக் கொள்ளை சம்பந்தமாக ஊர்க்காவலருக்குத் தகவலோ பத்திரிகைச் செய்தியோ எதுவுமில்லை?

ஒவ்வொரு கொள்ளையிலும் கிடைத்த பொருட்களைச் உடனடியாக செலவழிப்பது வீரபாண்டியன் வழக்கமில்லை. பத்திரிகைகளில் செய்தி--ஊர்க்காவலர் நடவடிக்கை — இவைகளை அறிந்தபின்பே, கொள்ளைப் பொருட்களைத் தன்னுடைய நண்பர்கள்மூலம் சாமர்த்தியமாகச் சிறுகச் சிறுகச் செலவிடுவான் அவன்!

இந்தக் கொள்ளையில் எவ்வித எதிர் ஒலியும் இல்லாமல் போகவே பத்து நாள்வரை காத்திருந்துவிட்டு "கொள்ளை கொடுத்த வீட்டுக்காரன் இன்னும் இரும்புப்பெட்டியைத் திறந்து பார்த்திருக்கமாட்டான்" என்று எண்ணிக்கொண்டான் வீரபாண்டியன்!

"விரைவில் அந்த ரூபாய் நோட்டுகளைச் செலவிடுவது நல்லதல்லவா? பெரும் பணம்—100 ரூபாய் நோட்டுக்களாக--வைத்திருப்பவர்கள் அவற்றின் வரிசை எண்களைக் குறித்து வைத்திருந்து அவைகளை ஊர்க்காவலர்களிடம் தாக்கல் செய்துவிடுவது வழக்கம். அதுபோல் ஏதாவது நடந்துவிடுவதற்கு முந்தியே 100 ரூபாய் நோட்டுக்களை மாற்றிவிட்டால்நல்லது" என்று முடிவு செய்தான்.

எனவே, கொள்ளைக்கூட்ட நண்பர்கள் 25 பேருக்கு தலைக்கு ரூ 2000 வீதம் நோட்டுக்களை பங்கிட்டுக் கொடுத்து, விரைவில் மாற்றிவிடும்படி எச்சரிக்கையும் செய்தான்.

அதன்படி எல்லாரும் ஒரே நாளில் நெல், அரிசி, பருப்பு, வேட்டி, சேலை, நகை முதலியவற்றை வாங்கி 100 ரூபாய் நோட்டுக்களை மாற்றிவிட்டார்கள்.

இந்தக் கொள்ளைக் கூட்டத்தில் கன்னிவாடி கருப்பணத் தேவனும் ஒருவன். அவன் மதுரைக்குக் கொண்டு வந்தான், இந்த நோட்டுக்களை.

தெற்கு ஆவணி மூலவீதி, சமு. ரய. சம்பந்தம் செட்டியாரின் பவளமாளிகை என்பது பழம்பெரும் நகைக்கடை. அதில் நுழைந்தான் கருப்பணத் தேவன்.

20 வராகன் எடையுள்ள காசுமாலை ஒன்றை 1995 ரூபாய் விலை பேசி 'பில்' போட்டு வாங்கிக்கொண்டு, வீரபாண்டியன் கொடுத்த 100 ரூபாய் நோட்டுகள் 20 ஐக் கொடுத்தான்.

நோட்டைக் கையில் வாங்கிய சம்பந்தம் செட்டியார் 20 நோட்டுகளையும் 40 தடவை திருப்பிச் திருப்பிச் சரி பார்த்தார்.

அவைகள் புத்தப்புதிய நோட்டுகளாக இருந்ததுடன் ஒவ்வொன்றிலும்

— 6-ம் பக்கம் பார்க்க —

அருப்புக்கோட்டை எம்.எஸ்.இராமசாமி

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

# எண்ணம்

மலர் 7 | 12-11-'60 | இதழ் 22

## காலங்கடந்து பிறந்த ஞானம்-ஆனால் உள்ளந் திறந்து சொன்ன உண்மை.

இன்றைய முன்னேற்ற உலகின் கண்ணோட்டத்தைக் கவர்ந்து நிற்கும் அகில உலக அரசியற் பெருந்தலைவர்களிலே ஒருவராகக் கருதப் படுகிறார்; அழப்பிறந்த நம்மையெல்லாம் ஆளப்பிறந்த அமைச்சர்களையெல்லாம் ஆளப் பிறந்த பண்டித நேரு.

இந்தியத் துணைக்கண்டத்தில், காங்கிரஸ் 'வில்லர்'களால் இன்று நடத்தப் படுகிற அரசியல் நாடகத்தின் புகழ்வாய்ந்த கதாநாயகர், இவர் ஒருவர்தான்.

இவர் அமைச்சராகிய பின்பு, செய்துகாட்டிய செயல்கள் குறைவென்றாலும், அகில உலகுக்கே எடுத்துக்காட்டிய கொள்கைகளும், தொடுத்துக் காட்டிய விளக்கங்களும், நடந்ததை குறைத்துக்காட்டிய உண்மைகளும், கூறியதை மறைத்துக் காட்டிய நிகழ்ச்சிகளும் ஏராளமுண்டு.

இந்தியாவில் "குடி"கட்டி ஆள்வதற்கும், கொடி கட்டி வாழ்வதற்கும் தகுதியான ஒரே கட்சி, காங்கிரஸ் கட்சிதான்-இதுவே இவரது "தாரகமந்திரம்."

"உங்கள் ஆணவ ஆட்சியில் எங்கள் உரிமைகள் மதிக்கப்பட வில்லை-மிதிக்கப்படுகின்றன" இப்படி உரிமைக் குரலெழுப்பியவர்களை நோக்கி "முட்டாள் களென்று, ஒருமுறையல்ல பலமுறை இவர் சொன்னதுண்டு.

எந்தவாய் எதிர்க்கட்சிக் காரர்களை முட்டாள்களென்று திட்டியதோ? அந்த வாய், இன்று தன் கட்சிக் காரர்களுக்கும் முட்டாள் பட்டத்தைச் சூட்டியிருக் கிறது.

இது, காலங்கடந்து பிறந்த ஞானமாயினும், உள்ளந் திறந்து சொன்ன உண்மை.

நவம்பர் ஆருந்தேதி போபாலிலே பேசிய நேரு, இன்றையக் காங்கிரஸ் கட்சியின் நிலையையும், அதன் உள்ளேயிருக்கும் 'கனம்' களின் உள்ளங்களையும் படம் பிடித்துக் காட்டுகிறார்.

"காங்கிரசில், அண்மைக் காலத்தில் காணப்படும் உட்கட்சிப் பூசல்களும், தனிநபர் போட்டிகளும் காங்கிரஸ் கட்சியில் நஞ்சைக் கலக்கின்றன".

"கட்சிக்குள்ளேயே இத்தகைய சண்டை சச்சரவுகள் நீடிப்பதற்கு அநுமதித்தால் நாட்டுக்குத் தொண்டு செய்ய காங்கிரசினால் இயலாமற் போய்விடும். இத்தகைய நிலைமை நீடிக்குமானால் காங்கிரசைக் கலைத்து விட்டு, வேறு கட்சி அமைப்பதுதான் சிறந்த நடவடிக்கையாக இருக்கும்".

"நாட்டின் நலனுக்காக, மாபெரும் பணிகளை மேற்கொள்ள வேண்டிய தருணத்தில், காங்கிரஸ்காரர்கள் தங்களுக்குள் 'குடுமிபிடி'ச் சண்டையில் இறங்கி, தங்கள் பொன்னான நேரத்தையும் சக்தியையும் வீணாக்குவது முட்டாள் தனமான செயலாகும்".

கட்சியில் பெரும் பதவிகளைக் கைப்பற்றுவதற்கான வேட்டையிலும், பாராளுமன்றத்திலும் சட்ட சபைகளிலும், இடம் பெறுவதற்காக ஒருவரோடொருவர் போட்டியிடுவதிலும் காங்கிரஸ் காரர்கள் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள்".

இன்றையக் காங்கிரஸ்காரர்களுக்கிருக்கின்ற கவலை, நாட்டைப்பற்றி யல்ல. தங்கள் பதவி வேட்டைக்காக நிகழ்த்தும் போட்டியைப் பற்றியதுதான். இவ்வளவு தெளிவாகப் பேசிய நேரு, அதே கூட்டத்தில் "இன்றைய நிலையில் நாட்டுக்குச் சேவை செய்யும் தகுதியும் திறமையும் வாய்ந்த கட்சி காங்கிரசைத் தவிர வேறு எதுவுமில்லை" இப்படியும் பேசியிருக்கிறார்.

முதலமைச்சராக இருப்பதனால் வருகின்ற புகழும், பெறுகின்ற மகிழ்வும் கிடைக்கின்ற சுவையும்(!) காங்கிரசைக் கலைத்து விட்டால் எப்படிக் கிடைக்கும்-ஆகவே அப்படிச் சொல்லிய வாய் இப்படிச் சொல்லியது ஆச்சரியமல்லவே !

காந்தியார் என்றோ கூறிவிட்டார், காங்கிரஸ் கலைக்கப்பட வேண்டிய கட்சி யென்று. அதைத்தான், இவ்வளவு நாட்களுக்குப் பிறகு நேரு கூறுகிறார்-ஆனால் அவருக்குச் சொல்லுவதுதான் வழக்கமே தவிர செய்வது பழக்கமில்லை. செய்யவும் போவதில்லை

தெரிந்து கொண்டும் நேரு, செய்ய விரும்பாத இந்தக் காரியத்தை, நேருவை முதலமைச்சராக்கத் தெரிந்த மக்கள் தெரிந்து கொண்டார்களென்றால் செய்து காட்டமுடியும். காங்கிரஸ் கட்சியைக் கலைத்துக் காட்ட முடியும்-அதன் ஊழல் நிறைந்த நிர்வாகத்தைக் குலைத்துக் காட்டமுடியும்-அதன் ஆணவம் நிறைந்த ஏதேச்சதிகாரத்தை உடைத்துக் காட்ட முடியும். செய்வார்களா ?

# போய் வருகிறேன்!

என் இனிய நண்பர்களே !

தூய்மையான உங்கள் இருதயங்களைக் கொஞ்சம் இந்தப் பக்கம் திருப்புங்கள்.

நல்லோர் உரைகளைக் கேட்டுக் கேட்டு, மெல்லிய பண்பு படைத்த உங்கள் செவிகளைக் கொஞ்சம் திறந்து வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம் விழுந்துவிடப் போகிறது,

உங்கள் சோலையிலிருந்து ஒரு குயில் கண்காணா உலகத்திற்குப் பறந்து செல்லப்போகிறது..

உங்கள் மலர்த்தோட்டத்திலிருந்து ஒரு மலர் உதிர்ந்து விடப்போகிறது.

உங்கள் கூடத்தில் கட்டப்பட்டிருந்த நன்றி மிக்க ஒரு உருவம், தன் கட்டுகளை அவிழ்த்துக்கொண்டு போய்விடப் போகிறது.

தனக்கென வாழ்ந்து பழக்கமில்லாதது என்று உங்களால் சொல்லப்பட்ட ஒரு இதயத்தை, நீங்கள் இழந்துவிடப் போகிறீர்கள்.

இருள் கப்பியதும், சோகமயமானதுமான முடிவை, உங்கள் தோழன் பெறப் போகிறான்.

முடிவின் தலைவாசலில் நின்று கொண்டு, அவன் உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறான்.

முடிவின் கதவுகள், திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.

போதும், உங்கள் அணைப்பிலே அவன் மகிழ்ந்து கொண்டிருந்த இன்பகரமான நாட்களை எண்ணிக்கொண்டிருப்பான்.

கனவுகளிலும் நினைவுகளிலும், எளிய கவிதை மலர்களைப் பறித்துக்கொண்டிருந்த அவனது உள்ளம், உங்களுக்காகவே ஏங்கிக்கொண்டிருக்கும்.

ஒருவேளை மறுபடியும் அவன் உங்களைச் சந்திக்க நேர்ந்தால், ஊமை தான் கண்ட கனவுகளை சைகையில் விளக்குவதுபோல், தத்துவங்களால் விமர்சனம் செய்துகொண்டிருப்பான்.

எதையும் பொருட்படுத்தாதவனாகவும், எதிலும் அகப்பட்டுக்கொள்ளாதவனுமாகத்தான் இதுவரை அவன் உங்களோடு வாழ்ந்திருந்தான்.

அவனது வாழ்க்கை, வேடிக்கையான நாடகமாக முடிந்துவிடப் போகிறது.

பதவி வேண்டும்; பதவிக்குமேல் பதவி வேண்டும், என்று அவன் அடித்துக்கொண்டதை எப்போதாவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ?

தன்னைப் பற்றித்தானே விளம்பரம் செய்துகொள்ளும் வேடிக்கை மனிதர் கூட்டத்தில், எப்போதாவது அவனை நீங்கள் சந்தித்திருக்கிறீர்களா ?

இன்னொருடைய கண்ணீருக்கு, அவன் காரணமாயிருந்தான் என்று எப்போதாவது அவனைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா ?

## கண்ணதாசன்

அந்த வாசலிலே நிற்கின்ற உங்கள் நண்பன், சிரந்தாழ்த்தி கடைசி முறையாக உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

துள்ளத் துடித்துக் கொண்டிருந்த அவனது போராட்ட இதயம், மெல்ல மெல்ல அமைதி அடைந்து கொண்டிருக்கிறது.

எந்தக் கடமையை முழு மனதோடும், யாருடைய தூண்டுதலும் இல்லாமலும் ஏற்றுக்கொண்டிருந்தானோ, அந்தக் கடமையிலிருந்து ஓய்வு பெறப்போகிறான்.

அவன் இந்த முடிவை விரும்பவில்லை,

இந்த முடிவு அவனை விரும்புகிறது.

தாண்டமுடியாத உங்கள் அன்பு வேலியை, அவன் தாண்டிக்கொண்டு ஓடப்போகிறான்.

அடர்ந்த காடும், பசுமை நிறைந்த மரங்களும், மணம்பரப்பும் மலர்களும், சலசலவென ஓடிக்கொண்டிருக்கும் நதியும், அந்த நதியின் கரையிலுள்ள அழகிய சிறு இல்லமும், அமைதியை நாடும் அவன் கண்களுக்குத் தெரிந்து, கொண்டிருக்கின்றன.

அவன் இனிச் சுதந்திரம் நிறைந்தவன்.

அவன் இனி. தனி மனிதன்.

ஆனால் ……………

எந்த மூலையிலிருந்தாலும், அவன் உங்களையே சிந்தித்துக்கொண்டிருப்பான்.

கன்னங்கரிய காகங்களையும் குயில்களையும் காணும்போதும், செக்கச் சிவந்த செம்பூத்துப் பறவைகளையும் செம்பருத்திப் பூக்களையும் பார்க்கும்

அவன் 'ஜார்' மன்னனின் நிழலில் குடியிருந்திருக்கிறான்.

அவன் 'சார்லசி'ன் குணங்களை அநுபவித்திருக்கிறான்.

ஆனால், அவன் மட்டும் 'பைர'னாகவே வாழ்ந்திருக்கிறான்.

ஏனோ அவன் மனம் சலித்துவிட்டது.

அவன் வேலை பார்த்த அரசாங்கம், அவனை நிம்மதியில்லாமல் அடித்து விட்டது.

உள்ளதை உள்ளபடி சொல்வது எவ்வளவு பெரிய தவறு என்பதை அவன் அனுபவ பூர்வமாகக் கண்டு விட்டான்.

நெஞ்சத்தால் ஒரு மனிதன், சொல்லால் ஒரு மனிதன், செயலால் ஒரு மனிதன், என்று ஒவ்வொரு மனிதனும் மூன்று வடிவம் எடுக்கும் உலகத்தில் அவன் மட்டும் ஒரே மனிதனாக வாழ்ந்து விட்டான்.

அவன் அன்போடு கைபோட்ட சில தோள்களில், முட்செடிகள் கத்தை கத்தையாக வளர்ந்திருந்தன.

யாரைக் குத்துகிறோம் என்று தெரியாமலேயே அவை, அவன் கையைக் கிழித்துவிட்டன.

கையில் ரத்தம் வடிகிறது என்று அவன் கதறினான்.

அதை எப்படி நீ சத்தம் போட்டுச் சொல்லலாம் என்று சிலர் கோபித்தனர்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

கூடவே அழுகையும் வந்தது.

ஊமையாகவே இருந்துவிட்டான்.

— 6-ம் பக்கம் பார்க்க —

# மல்லிகைப்

## 29. மாப்பிள்ளை வருகிறார்!

அன்புள்ள ராதா,

வீணான கற்பனைகளில் நீ மனத்தை அலட்டிக் கொண்டிருக்க வேண்டாம் என்பதற்காகவே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். உன் உயர் குணங்களை நான் மதிக்கிறேன்; அன்பும் செலுத்துகிறேன். ஆனால், நீ என்னிடம் காதல் கொண்டிருப்பது நேற்று வரை எனக்குத் தெரியாது. நேற்றுத் தற்செயலாக நான் கடற்கரையில் உட்கார்ந்திருந்த போது, சிறிது தூரத்தில் நீயும், உன் பணக்காரத் தோழி ஒருத்தியும் பேசிக் கொண்டிருந்த விஷயங்கள் என் காதில் விழுந்தன. பிறர் பேசுவதை நான் காதுகொடுத்துக் கேட்கும் வழக்கம் கிடையாது. ஆனால், நேற்றைய உங்கள் உரையாடலில் அடிக்கடி என் பெயர் அடிபட்டதால் நான் சற்று கூர்மையாகக் கவனிக்க நேர்ந்தது. ராதா! உன் இதயத்தின் காதல் பீடத்தில் நீ எனக்கு நிறைய இடம் ஒதுக்கியிருக்கிறாய். ஆனால், அந்த இடத்தை ஏற்றுக் கொள்ளக் கூடியவனாக நான் இல்லை. அதிர்ச்சியடைந்துவிடாதே! மனத்தைக் கட்டுப் படுத்திக் கொள், உனக்கு ஏற்ற கணவன் ஒருவனைக் கூடி நீ இல்லற வாழ்வில் இனிது ஈடுபடவேண்டும் என்பதே என் விருப்பம்,

நீ என்னைப் பற்றிய நினைப்பை விட்டுவிட வேண்டிக்கொள்கிறேன். இதற்குக் காரணம் என்னவென்றால், உன்னைப்போலவே என் இதயத்தை நான் இன்னொருத்திக்காகத் திறந்து வைத்துக்கொண்டு காத்திருக்கிறேன். அவள் என்னை விரும்பாததுபோல் தோன்றினாலும், விரைவில் அவள் என் அன்புக்குக் கட்டுப்படுவாள் என்று நான் முழு நம்பிக்கையோடு இருந்து வருகிறேன். அவளை நினைத்த நெஞ்சால், இன்னொருத்தியை என்னால் நினைக்க முடியவில்லை. ராதா என்னை மன்னித்துக்கொள். நான் காதலிக்கும் பெண் எப்படிப்பட்டவள் என்று நீ அறிந்துகொள்ள ஆசைப்படக்கூடும். அதற்காகவே சொல்லுகிறேன், அவள் தான் உன் தோழி தங்கம்.

ராதா! இனி நீ என்னை மறந்துவிடு! வீண் மனக்கோட்டைகள் எழுப்பிக் கடைசியில் நீ துன்பத்தில் சாய்ந்து விழுந்துவிடக்கூடாது என்பதற்காகவே நான் இப்பொழுதே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

அன்புள்ள,

நடராசன்.

தங்கம், இந்தக் கடிதத்தைப் படித்து முடித்தபோது அவள் சிந்தனை குழம்பியது. என்ன முடிவுக்கு வருவதென்றே அவளுக்குத் தெரியவில்லை.

நடராசன் சென்னையில்தான் இருக்கிறான். அதுவும் தன்னை மறவாமல் இருக்கிறான் என்ற நினைப்பு அவள் உள்ளத்தில் ஏதோ ஒருவிதமான உணர்ச்சியை உண்டாக்கியது.

அவள் மனம் சுற்றிச் சுற்றிவந்தது. அவள் வாழ்க்கையில் எதிர்ப்பட்டவர்கள் மூன்றுபேர். அத்தான் சுந்தரேசனைப்பற்றி நினைப்பதே பாவம்! அவன் அத்தகைய கொடியவனாக இருக்கிறான் என்பதைத் தங்கம் புரிந்து கொண்டு விட்டாள். ஆகவே அவனை ஒதுக்கிவிட வேண்டியதுதான். அத்தானுக்கு முன் அவள் கண்ணில் தட்டுப்பட்டுக் கருத்தைக் கவர்ந்தவன் நடராசன்தான். என்பதில் ஐயமில்லை. ஆனால் கருத்தில் புகுந்த சிறிது நேரத்திலேயே தங்கம் அவன் எண்ணத்தைத் தள்ளிவிட்டாள். அதற்குக் காரணம் அந்த அரைகுறையான கை ஆனால், இப்போது அவனைப் போலவே வெட்டுண்ட கையோடு இருக்கும் ராஜுவிடம் கூடத் தன்மனம் அலைபாய்கிறதே, இது ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை.

ராஜுவும் மலர்க்கொடியும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள் என்றுதான் தங்கம் நினைத்தாள். அவர்கள் காதலுக்குக் குறுக்கே தான் நுழைவது சரியல்ல என்று அவள் அறிவு உணர்த்தியது.

கடைசியாகத் தனக்கு மிஞ்சுபவன் நடராசன்தானா? தங்கம் இந்தக் கேள்வியைத் தன் இதயத்துக்குள்ளேயே கேட்டுப் பார்த்துக் கொண்டாள்.

நடராசனுடைய பழைய உருவத்தை அவள் தன் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்திப் பார்த்தாள். அது தெளிவாகத் தெரியவில்லை. பார்த்து அதிக நாளாகிவிட்டதல்லவா?

நடராசனுடைய கபடமற்ற பேச்சுக்களும், இனிய குணங்களும் அவள் கருத்தில் தோன்றின. தன்னையே திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று அவன் அப்போது தொடங்கிச் சொன்ன வார்த்தைகள் அவள் காதுகளிலே மீண்டும் ஒலித்தன. கடைசியாக அவள் கையிலிருந்த கடிதமும் அவனுடைய உறுதியான காதலை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தது.

திரும்பவும் ராஜு அவள் மனக்கண் முன் தோன்றினான். தங்கம் ராஜுவையும் நடராசனையும் ஒப்பிட்டுப் பார்த்தால். இருவருக்குமே நல்ல குணம், ஏறக்குறைய ஒரே மாதிரியான உருவம்.-ஒரே மாதிரியான கையூனம். இருந்த வேற்றுமை யொன்றேயொன்றுதான்! நடராசன் பட்டிக்காட்டான், ராஜு பட்டணத்தான். நடராசன் தன்னை மனதார நேசிக்கிறான்-ராஜுவின் நேசமோ மலர்க்கொடியிடம் திரும்பியிருக்கிறது. தன் உள்ளம் ஏன் இப்படி நீதி நியாயத்திற்குக் கட்டுப்படாமல் ஒரு வரம்புமில்லாமல் என்னென்னவோ எண்ணுகிறது என்று தங்கத்திற்குப் புரியவில்லை.

ஒருமுறை நடராசனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது எங்கே பார்க்கலாம்? கடிதத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள் முகவரி எதுவும் அதில் எழுதப்படவில்லை. கடிதம் கொண்டுவந்த சிறுவனைத் தான் எதுவும் விசாரிக்காமல் அனுப்பியது தவறு என்று எண்ணினாள். ஆனால், இனி அதை எண்ணி வருந்திப் பயனில்லை. நடராசன் இருக்குமிடம் தெரியாதது அவளுக்கு என்னவோ மாதிரியிருந்தது.

திடீரென்று அவளுடைய சிந்தனை புது மாதிரியான திசையில் வேலை செய்ய ஆரம்பித்தது. காதல் அன்பு ஆசை என்பதெல்லாம் வெறும் மாயை.

காதல் உண்மையென்றால், அது இரண்டு புறமும் அன்பும் விருப்பும் ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். உலகத்தில் எங்கே அதுபோல் இருக்கிறது? ராதாவுக்கு நடராசன் மேல் ஆசை நடராசன் என்னை விரும்புகிறான். எனக்கோ ராஜு கவர்ச்சியாகத் தென்படுகிறான். ராஜு மலர்க்கொடியிடம் அன்பாயிருக்கிறான். மலர்க்கொடி...? அவள் ராஜுவிடம் அன்பாயிருக்கிறாளே, அது உண்மையான காதல் தான்! அப்படி இருந்தால் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், ஆடவர்களைப் பற்றி நினைப்பதே கூடாது.

நான் ஏன் அவரையும் இவரையும் பற்றி எண்ணிக் கொண்டிருக்க வேண்டும்? இவ்வளவு நாட்கள் இருந்தது போல இனியும் இருந்து விட்டால் என்ன? அப்பா அம்மாவுக்கு வருத்தம் ஏற்படும். நம் பெண் திருமணமாகாமல் இருக்கிறாளே, நம்மால் திருமணம் செய்து வைக்க முடியாமல் போய் விட்டதே என்று வருத்தப் படுவார்கள், அதற்குத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

இவ்வளவு நாளும், கையில் செல்வமில்லாத காரணத்தால் கலியாணம் நடக்காமல் இருந்தது. கையில் செல்வமிருந்தும், கலியாணம்தடைப்படுகிறது என்ற நிலைமை வந்தால் அவர்கள் மனம் எவ்வளவு வேதனைப் படும்.

இதற்கு என்னதான் முடிவு? தனக்கோ, மனம் பற்றுவைக்கிற இடமெல்லாம் ஒட்டுறவு ஏற்படாத இடமாக மாறிவிடுகிறது. ஒருவகையில் இல்லாவிட்டால் ஒருவகையில் தன் காதல் தோல்விப் பாதையிலேயே போகிறது.

இப்படிப்பட்ட காதல் ஏற்படுவதைக் காட்டிலும் ஏற்படாமல் இருந்தால் நல்லதல்லவா?

என்னை யார் காதலிக்கச் சொன்னார்கள்? நானாகத்தானே எல்லாம் இழுத்துப் போட்டுக்கொண்டு வேதனைப்படுகிறேன். காதலித்துத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று சட்டமா? இன்னும் சொல்லப்போனால், சமுதாயத்திலே காதல் திருமணங்களுக்குத்தானே எதிர்ப்பு இருக்கிறது. நான் யாரையாவது, உறுதியாகக் காதலித்து இவரைத்தான் திருமணம் செய்துகொள்வேன் என்று சொன்னால். அது அப்பா அம்மாவுக்குப் பிடிக்காமல்கூட இருக்கலாம். கயிலாய மாமாவுக்குக்கூடப் பிடிக்காமல் இருக்கலாம். ஏன் இந்த வம்பெல்லாம்?

இனிமேல் இந்த மனத்தில் காதலைப் பற்றியே சிந்திக்கக்கூடாது வீண் போராட்டங்களுக்கு இடங்கொடுத்தால் கடைசியில் ராதாவைப்போல் மனதாரக் காதலித்து அது கைகூடாவிட்டால் சித்தப்பிரமைகூட ஏற்படக்கூடும். இந்த வம்பெல்லாம் வேண்டாம்.

நடராசனை ராதாவே திருமணம் செய்துகொள்ளட்டும். ராஜுவை மலர்க்கொடியே மணந்துகொள்ளட்டும்.

நான் சும்மாயிருக்கிறேன்.

திருமணம் வேண்டாம் என்று சொல்லிவிடுகிறேன்.

அப்பாவும், அம்மாவும் மாமாவும் வருத்தப்பட்டால், "வருத்தப்படாதீர்கள்! நீங்கள் பார்க்கிற மாப்பிள்ளையையே கட்டிக்கொள்கிறேன்" என்று சொல்லிவிடுகிறேன். இதில் வம்பில்லையல்லவா? யாரைக் கணவனாகப் பெற்றாலும், மனத்தை அவர்மீது செலுத்தினால், அவர்மீது பிரியம் காட்டி நடந்துகொண்டால், அவர் பதிலுக்குக் காதலிக்காமலா இருக்கப்போகிறார்? இதுதான் சரியான முடிவு.

இப்போது காதலும் வேண்டாம், கத்திரிக்காயும் வேண்டாம். எல்லாம் திருமணத்திற்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், ஆனால், நடராசன், என்னைக் காதலிப்பதாகச் சொல்லுகிறானே! பாவம்! ஏற்கனவே அரைப் பைத்தியமாக இருந்தவன். மாமா உதவியால் தெளிவு ஏற்பட்டது, இப்போது அவன் என்மீது கொண்டுள்ள காதலில், ஏமாற்றமடைந்து, ராதாவைப்போலவே அதிர்ச்சியடைந்து மீண்டும் பைத்தியமாகிவிட்டால்...? ஐயோ! பாவம்! அப்படி யாகும்படி விடக்கூடாது.

அதற்காக அவனைக் கட்டிக் கொள்வதா? அப்படியானால் ராதாவின் கதி! ராதா, பாவம் மிகவும் நல்லவள். அவள் துயரப்படும்படி விடக்கூடாது, எப்படியாவது நடராசனை அவளோடு சேர்த்து வைத்துவிட வேண்டும்.

மாறி மாறித் தங்கத்தின் சிந்தனை சுழன்று கொண்டிருந்தது. இரவு வெகுநேரம் வரை அவள் தூங்கவேயில்லை, பலதரப்பட்ட எண்ணங்களோடு படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

நள்ளிரவில் யாரோ தன் அறைக் கதவை இலேசாகத் தட்டுவது போலிருந்தது முதலில் தங்கம் அதைக் கவனிக்க வில்லை. பிறகு, மீண்டும் அந்த ஓசை காதில் விழுந்தபோது தங்கம் கவனித்தாள். வேறு எங்கோ ஏதோ சத்தம் ஏற்படுகிறதென்று நினைத்துக் கொண்டாள். மூன்றாவது தடவையாகக் கதவுதட்டப்பட்டபோது. தன் அறைக் கதவைத்தான். யாரோ தட்டுகிறார்கள் என்று நிச்சயித்துக் கொண்டாள். "தங்கம், தங்கம்" என்று யாரோ தன்னை அழைப்பது போலவும் இருந்தது.

---

புதிய முகவரி

"இளமுழக்கம்"

158, பெரியதெரு,

திருவல்லிக்கேணி

சென்னை-5,

# பந்தல்

தங்கத்திற்குப் பயமாயிருந்தது இருட்டில் யார் அப்படித் தன்னை அழைக்கக் கூடும் என்று அவளால். சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. ஆனால், விட்டுவிட்டுக் கதவு தட்டப் படும் அந்த இலேசான ஓசை கேட்டுக் கொண்டேயிருந்ததால், கதவைத் திறந்து பார்த்து விடுவதென்று முடிவு செய்தாள்.

நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொள்ள, உடல் வெடவெட வென்று நடுங்க அவள்மெல்ல எழுந்து சென்று, விளக்கைத் தட்டினாள்.

கதவின் தாளை அகற்றினாள்

உடனே ஓசைப்படாமல் மெதுவாகக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் இராதா! இராதாவைக் கண்டதும் தங்கத்திற்கு உடம்பு பதறியது.

பிரமை பிடித்த நிலையில் அவள் என்னென்ன செய்வாளோ? அதுவும் இந்த நள்ளிரவில் தன்னந்தனியாகத் தான் இருக்கும் போது அவள் காதலுக்குரியவன் தன்னைக் காதலிக்கிறான் என்ற எண்ணத்தால் ஏற்பட்ட சித்த பேதத்தோடு வந்துள்ள அவள் என்னென்ன செய்வாளோ என்று தங்கம் அஞ்சினாள்.

பயத்தோடு அவள் இராதாவை நிமிர்ந்து நோக்கினாள். வெளிச்சம் இராதாவின் முகத்திற்கு நேராக அடித்துக் கொண்டிருந்தது. அந்த முகத்தில் ஒரு தெளிவு இருந்தது.

அந்தத் தெளிவான தோற்றம் தங்கத்தின் பயத்தைப் போக்கடித்து விட்டது.

"தங்கம், இங்கே வா!" என்று இராதா அவளைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுவந்து கட்டிலின் மேல் உட்காரவைத்தாள்.

ராதா என்ன சொல்லப் போகிறாள் என்று தங்கம் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

"தங்கம், நான் ஒன்று சொல்லுகிறேன், அதன்படி கேட்பாயா?"

"சொல்லு"

"கேட்கிறேன் என்று உறுதி சொன்னால்தான் சொல்லுவேன்."

"ராதா. உனக்காக நான் எதையும் செய்வேன். ஆகவே, சந்தேகப் படாமல் சொல்லு!" என்றாள் தங்கம்

"அதெல்லாம் எனக்குத் தெரியும். தங்கம், உன் குணத்தை நான் அறியாதவளா என்ன? ஆனால். இப்போது நீ வாக்குறுதி கொடுத்துத்தான் ஆகவேண்டும்."

"சரி, நீ சொல்லுகிறபடி கேட்கிறேன். விஷயத்தைச் சொல்லு" என்றாள் தங்கம்.

ராதா திருப்தியுடன் சொல்ல ஆரம்பித்தாள்.

"தங்கம், உன்னிடம் வாக்குறுதி கேட்டிருக்க வேண்டியதில்லை. ஆனால், அந்த உறுதி கேட்காமல் என் மனம் சமாதானப்படவில்லை. இப்போது நீ உறுதி சொல்லிவிட்டபடியால், நான் துணிந்து சொல்லுகிறேன். உன் தோழிக்காக நீ இந்தக் காரியத்தை அவசியம் செய்துதான் ஆகவேண்டும். ஆம்! உன் ஆருயிர்த் தோழியின் இதய விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக நீ நான் சொல்லுகிறபடி செய்யத்தான் வேண்டும். தங்கம், எனக்காக—இதைச் செய்! நீ அவரை —நடராசனைக் கலியாணம் செய்து கொள்!" என்றாள் ராதா.

தங்கம் பதறினாள்!

"ராதா, என்ன உளறுகிறாய்?" என்று கோபத்தோடு கேட்டாள். ராதாவின் பைத்தியம் இன்னும் தெளியவில்லை என்று நினைத்துக்கொண்டாள்.

ஆனால், ராதா தெளிவான குரலில் தொடர்ந்து கூறினாள்.

'தங்கம், உனக்கு அவரைப் பிடிக்காது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் அவரைக் காதலிக்கிறேன் என்பதும் உனக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் நான் ஏன் இப்படிச் சொல்லுகிறேன் தெரியுமா? தங்கம், அவர் இன்பமாக இருக்க வேண்டும் என்பது தான் என் குறிக்கோள். நீ அவரைக் காதலிக்காவிட்டாலும் அவர் உன்னைக் காலிக்கிறார். நான் எவ்வளவு தூரம் அவரைக் காதலிக்கிறேனோ அவ்வளவு தூரம் அவர் உன்னைக் காதலிக்கிறார். தங்கம், நான் ஒரு பெண். என்னால் இந்தத் துயரத்தைத் தாங்கிக் கொள்ளமுடியும்.

ஏமாற்றத்தைப் பெண்கள் இதயம் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால், அவர் ஓர் ஆண். அதிலும். ஏற்கனவே அவருடைய இதயம் பைத்தியக்கார நிலையில் இருந்தது. இதுபோன்ற ஏமாற்றத்திற்கு அவர் ஆளானால் பாவம்! மீண்டும் பைத்தியக்காரர் ஆகிவிடுவார் தங்கம், உனக்குத் தெரியாது அவர் உன்னைக் காதலிக்கிறார் என்று. அவர் எனக்கு எழுதியிருக்கிறார். அவர் என்னை விரும்பாவிட்டாலும் என் இதய பீடத்தில் என்றும் வாழுகிறார். அளர் துயரப் பட்டால் என் உள்ளம் துடிக்கும். அவர் இன்பமாக வாழ்ந்தால் என் இதயம் களிக்கும். தங்கம், அவருக்கு வாழ்வளித்து எனக்கு மனநிறை வளிக்க நீ அவரைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும். செய்து கொள்ளுவாயா தங்கம்:" என்று கேட்டாள் ராதா.

தங்கம்- ராதாவை நோக்கித் திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தாள். என்ன பதில் சொல்வதென்றே அவளுக்குத் தெரியவில்லை. ராதாவின் போக்கு ஒவ்வொன்றும் அவளுக்கு வியப்பூட்டுவதாக இருந்தது.

ராதாவின் உள்ளத்தில் படிந்திருந்த தூய்மையின் மேம்பாட்டை முயன்றாலும் தன்னால் எட்டிப் பிடிக்க முடியுமா என்று அவளால் எண்ணிப்பார்க்கக் கூட முடியவில்லை,

"தங்கம், அவர் கையில் உள்ள ஊனத்தையே பெரிதாக எண்ணிக் கவலைப்படாதே! அவருடைய உள்ளத் தூய்மையும் குணச் சிறப்பும் அறிவு நலமும் உனக்குத் தெரியாததல்ல. அவரை மணம் புரிந்து கொள்வதால் உனக்கு ஒன்றும் குறை வந்துவிடப் போவதில்லை; மகிழ்ச்சியே உண்டாகும். நாளடைவில், அவர் நல்ல குணங்கள் உன்னைத் தன் வயப்படுத்திவிடும். ஆனால், இதை நீ மறுத்தால், இரண்டு பேருடைய துன்பத்திற்குக் காரணமாவாய். தங்கம், உன்னை யடையாவிட்டால் அவர் இன்பம் காணப்போவதில்லை. அவர் துயரப் பட்டால் என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது!" என்று மீண்டும் ராதா தங்கத்தை வற்புறுத்தினாள்.

தங்கம் பேசாமலிருந்தாள். என்ன பதில் சொல்லுவதென்றே அவளுக்குப் புரியவில்லை.

"என்ன தங்கம்? ஏன் பேசாமலிருக்கிறாய்! நான் சொல்லுவது உனக்குப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டாள் ராதா.

"ராதா, நானே நடராசனைப் பார்த்து உன்னைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்கிறேன். நீ வீணாக அலட்டிக் கொள்ளாதே" என்றாள் தங்கம்.

"தங்கம், இன்னும் அவர் கை ஊனத்தைப் பற்றி நீ குறைப்பட்டு கொண்டுதான் இருக்கிறாயா?" என்று சினத்தோடு கேட்டாள் ராதா,

'இல்லை ராதா! ஆனால், உன்னால் நேசிக்கப் பட்ட அவரை உன்னோடு சேர்த்து வைத்துப் பார்க்க ஆசைப் படுகிறேன்! இது தவறு?' என்று திருப்பிக் கேட்டாள் தங்கம்.

"தங்கம், அது உன்னால் முடியாது. நீ வீணாக என்னைக் குழப்பாதே. அவர் உன்னைக் காதலிக்கிறார். நீ அவரை ஏற்றுக் கொள், நீங்கள் இருவரும் மகிழ்ச்சியாக இருந்தால் அதுவே எனக்குத் திருப்தி" என்றாள் ராதா.

---

## கேளுங்கள்

அடுத்த இதழிலிருந்து, ஆசிரியர் **கண்ணதாசன்** வாசகர்களின்கேள்விகட்குத்தொடர்ந்து பதிலளிக்கிறார்.

---

ராதா தன் முடிவை மாற்றிக் கொள்வாள் என்று தோன்றவில்லை தன்னைப் போல் எதிலும் ஒரே குழப்பமாக இராமல், எப்போதும் தீர்க்கமான ஒரு முடிவுக்கு ராதா வந்துவிடக் கூடியவள் என்பதைத் தங்கம் பல சமயங்களில் கண்டிருக்கிறாள். ஆகவே, அவள் ராதாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட வேண்டியதாயிற்று.

கடைசியில் ஒரு தெளிவான முடிவுக்கு வராமலேயே, தங்கம் இராதாவுக்குத் தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றித் தருவதாகச் சொன்னாள்,

ராதாவின் முகத்தில் அப்போது ஒரு விதமான சாந்தியொளி பிறந்தது. கட்டுக் கவலையற்ற பேரறிவாளர்களின் அகத்திலும் முகத்திலும் காணப் படுகின்ற அந்த ஒளி அவள் அகத்திலும் முகத்திலும் நிறைந்திருந்தது.

ராதாவை உற்று நோக்கிய தங்கத்திற்கு அவள், மிக உயர்ந்தவளாகக் காணப்பட்டாள். மனித குணத்தின் உயர்வான நிலையில் ராதா சஞ்சரித்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

ராதா, தன்னிடம் விடைபெற்றுக் கொண்டு அறையை விட்டுச் சென்ற பின் விளக்கை யணைத்து விட்டுத் தங்கம் படுக்கையில் வந்து சாய்ந்தாள்.

அந்த அறை இருளில் மூழ்கிக் கிடப்பது அவளுக்குத் தெரியவில்லை. அங்கே தியாக வடிவமான ஒரு பேரொளி நிறைந்து அது உலகத்தைத் தெளிவாக்கிக் காட்டிக் கொண்டிருப்பது போல் தோன்றியது.

ராதாவின் தியாக உள்ளத்தை எண்ணிப் பார்க்கப் பார்க்கத் தங்கத்திற்குத் தானும் தியாக வாழ்வு வாழ வேண்டும் போல் தோன்றியது தான் நடராசனை விரும்பாவிட்டாலும், ராதாவிற்காக அந்தத் தியாக வாழ்வை ஏற்றுக் கொள்ள வேண்டும்போல் தோன்றியது.

இனித் தான் குழப்பமடைய வேண்டியதில்லை.

இனித்தான் எவ்விதமான உணர்ச்சிகளுக்கும் ஆட்பட்டுத் தவித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

ஒரே முடிவு!

நடராசனைத் திருமணம் புரிந்து கொண்டுவிட வேண்டும்-

இதில் மாற்றமில்லை.

இவ்வாறு உறுதி செய்து கொண்டு தங்கம் கண்ணைமூடினாள்.

மனக்குழப்பத்திற்கெல்லாம் ஒரு முடிவு கண்டுவிட்ட அவளைத் தூக்கம் உடனே வந்து தழுவிக்கொண்டது.

காலையில் தங்கம் எட்டு மணிக்குத் தான் எழுந்தாள். குளித்து முடித்து விட்டு அவள் தலைவாசிக்கொண்டிருந்த போது, மலர்க்கொடி வந்து சேர்ந்தாள். மலர்க்கொடியின் அங்க அசைவுகள் ஒவ்வொன்றிலும் ஆனந்தம் துள்ளிக்குதிபோட்டுக்கொண்டிருந்தது.

அறைக்குள் நுழையும்போதே, "தங்கம்! ஒரு நல்ல செய்தி சொல்லப் போகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே வந்தாள்.

"அப்படி என்ன? கலியாணச் செய்தியா!" என்று கேலியாகக் கேட்டாள் தங்கம்.

"உனக்கு முன்னாலே தெரியுமா? யார் சொன்னது?" என்று கேட்டாள் மலர்க்கொடி.

"யாரும் சொல்லவில்லை. எதுவும் தெரியாது. ஆமாம், என்ன செய்தி?" என்று விசாரித்தாள் தங்கம்.

"தங்கம்... எனக்கு... திரு.... நிச்சயமாகிவிட்டது" வெட்கத்தால் வார்த்தைகள் வெளிவரவில்லை. சொல்லி முடிப்பதற்குள் மலர்க்கொடியின் முகம் குங்குமம்போல் சிவந்துவிட்டது.

"திருமணமா? காதல் திருமணம் தானே?" என்று கேட்டாள் தங்கம்.

மலர்க்கொடியின் முகம் மேலும் சிவந்தது. "ஏண்டி, உனக்கு எல்லாம் தெரியும் போலிருக்கிறதே! யாரடி சொன்னார்? அவர் யாரென்றுகூடத் தெரியுமா உனக்கு?" என்று கேட்டாள் மலர்க்கொடி.

"தெரியுமே, சொல்லட்டுமா?" என்றாள் தங்கம்.

"சொல்லேன்!" — தன் காதலர் பெயரைக் காது குளிரக் கேட்கவேண்டும் என்ற ஆவலோடு கேட்டாள் மலர்க்கொடி.

"சொல்லுகிறேன், கேள், அவர் தான்... அவர்.... தான்.... உன்.... காதலர்!" என்று விளையாடினாள் தங்கம்.

தங்கம் விஷயந்தைத் தெரிந்து கொண்டுதான் பேசுகிறாள் என்று மலர்க்கொடி எண்ணி, மேற்கொண்டு விவரங்கள் கூறத் தொடங்கினாள்.

"தங்கம். நாளைக்குத்தான் அவர் சீமையிலிருந்து வருகிறார். அவரை வரவேற்க மீனம்பாக்கத்திற்குப் போகிறோம். தங்கம், நீயும் ராதாவும் என்னோடு வருகிறீர்களா?" என்று ஆசையோடு கேட்டாள் மலர்க்கொடி.

"சீமையிலிருந்தா? யாரது?" என்று கேட்டாள் தங்கம். இதுவரை மலர்க்கொடியின் காதலன் ராஜு என்று எண்ணிக்கொண்டிருந்தாள் தங்கம். மலர்க்கொடியின் பதில் அந்த எண்ணத்தைத் தூளாக்கிவிட்டது.

தொடரும்

-நாரா நாச்சியப்பன்-

# அந்தக் கொள்ளை

2-ம் பக்கத் தொடர்ச்சி

வீரபாண்டியனின் கைரேகைபுறைக்கும் மெழுகு ஆங்காங்கு அப்பிக்கொண்டிருந்தது.

செட்டியாருக்கு சந்தேகம்: புதிய நோட்டுகளில் மெழுகு எப்படி வந்திருக்கும் என்று ஆலோசித்தார். "இந்த நோட்டுகளை யாரிடம் வாங்கினய்?" என்ருர்

கருப்பனை் சொன்ன பதில்கள் தெளிவாக இல்லாமல் போகவே ஊர்க்காவல்கூடத்தில் இரகசியமாக தொலைபேசி அலறியது.

கருப்பணன் கைதுசெய்யப்பட்டான். 3 நாள் சித்ரவதைக்குப்பின் ரூபாய் நோட்டுக்கள் வந்த வரலாற்றை ஆதியோடந்தமாகக் கக்கினன்.

கோயமுத்தூருக்கு தொலைபேசி பறந்தது. அங்குள்ள ஊர்க்காவலர்கள் கொள்ளை நடந்த 3 மாடி வீட்டை முற்றிகையிட்டனர்.

ஆனுல் அந்த வீட்டுக்காரனே தனது வீட்டில் எத்தகைய திருட்டும் போகவில்லை என்று உறுதியாகக் கூறிவிட்டான்.

அதன் பிறகுதான் ஊர்க்காவல் தலைவர்களுக்கு கருப்பணனிடம் கைப்பற்றிய நோட்டுகளின் மீது சந்தேகம் எழுந்தது.

நோட்டுகள் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டன. அத்தனையும்கள்ளநோட்டுகள்!

பரிசீலனை செய்து கள்ளநோட்டுகள் என்று தெளிவாவதற்குள் 15 நாட்கள் கடந்துவிட்டன.

கருப்பணன் கைதான மறுநாளே பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியானது.

அன்றைக்கே த லை ம றை வா கி விட்டான் வீரபாண்டியன்! மறுநாள் வாசுதேவநல்லூர் மலைகளுக்கு நடுவிலிருந்த காட்டில் — பலாமரத்தின் உச்சியல் — பரண கட்டிக்கொண்டு இருந்தான!

★

சடையாண்டி டிபன்கேரியரில் சோறு கொண்டு வந்தது வீரபாண்டியனுக்குத்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை!. சுமார் 3 மாத காலமாக சடையாண்டி தினசரி இப்படி சோறு சுமந்துகொண்டு திரிகிருன்!



ஊர்க்காவலர் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு வீரபாண்டியன் மலைக் கோட்டைக்குள் பத்திரமாக இருந்து வருகிருன்.

அன்று சாப்பிட்டு முடிந்தவுடன்: என்னப்பா சடையாண்டி! எத்தனை நாளைக்கு இப்படிக் காலம் தள்ள முடியும்? இதற்கொரு முடிவே இல்லையா? என்று புலம்பினுன் வீரபாண்டியன்.

அண்ணே! கவலைப்படாதே ஏற்பாடு நடந்து கொண்டிருக்கு! பத்து நாளையிலே முடிவாகும்! என்று தேற்றினுன் சடையாண்டி. மாலை மயங்கி இருள் சூழும்வரை இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

பிறகு, சடையாண்டி விடைபெற்றுக்கொண்டு திரும்பும்போது, வீரபாண்டியனுடைய உடைவாளை வாங்கிக் கொண்டு திரும்பினுன். அதில் வீரபாண்டியன் என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.

இது நடந்த மூன்ருவதுநாள் இராசபாளையத்திற்குப் பக்கத்திலுள்ள சிவகிரிக் காட்டில் 30 வயது மதிக்கத்தக்க அநாதைப் பிணம் ஒன்று கிடந்தது. அந்தப் பிணம் கொலையா? தற்கொலையா? என்று தீர்மானிக்க முடியாத அளவுக்கு உருக்குலைந்து போயிருந்தது.

அதனுடைய இடுப்பில் உறையுடன் தொங்கிக் கொண்டிருந்த உடைவாள் பிடியில் "வீரபாண்டியன்" என்ற பெயர் இருந்தது.

ஊர்க்காவலர்கள் சிங்காநல்லூருக்குப் போய் வீரபாண்டியனுடைய தம்பி சின்னணைஞ்சாத் தேவனையும் அவனுடைய உறவினர் இருவரையும் பிணத்தை அடையாளம் பார்க்க அழைத்து வந்தார்கள்.

இறந்தது வீரபாண்டியன்தான் என்று அவர்கள் உறுதியாகச் சொன்ஞர்கள். பரிசோதனைக்குப்பின் பிணத்தையும் ஒப்புக் கொண்டார்கள்.

தமிழ்நாட்டு ஊர்க்காவல் துறை ஆவணங்களில் 5 ஆண்டுகளாக நாட்டைக் கலக்கி வந்த வீரபாண்டியத் தேவன் கொலையுண்டோ தற்கொலையாலோ ஒழிந்தான்" என்று எழுதி வைக்கப்பட்டது அத்துடன் கொலை கொள்ளையும் ஓய்ந்தது.

இது நடந்த 6 மாதங்களுக்குப்பிறகு ஒருநாள் தென்காசி பஸ் நிலையத்தில், சர்வாங்கமும் கதராடை பூண்ட ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

அப்போது, அம்பா சமுத்திரத்திலிருந்து வந்த பஸ்ஸிலிருந்து ஒருவர் இறங்கினுர். அவரும் கதர் மயமாகவே காட்சியளித்தார்.

நின்று கொண்டிருந்தவன் ஓடோடிப் போய் பல்லெல்லாம் வெளியில் தெரிய அவரை வரவேற்ருன்.

அவர், நிதானமாக நின்று சுற்றிலும் ஒரு முறை பார்த்துவிட்டு ஒதுக்குப்புறம் தேடி நடந்தார். அவனும் கூடவே தொடர்ந்தான்.

மிக மெதுவான குரலில்; "என்ன தேவரே! சௌக்கியமா?" என்ருர். தொடர்ந்து :—"இப்போது உமது பேர் என்ன? யாராவது உம்மிடம் இத்தனை காலம் எங்கே இருந்தீர் என்ருல் என்ன சொல்கிறீர்? சிமிண்டு கோட்டா கிரமமா கிடைக்குதா?' என்று அடுக்கினுர்.

அவன்; ஏதோ சௌரியமாத்தான் இருக்கிறேன். சிமிண்டு கோட்டா கிடைக்குது. ஆனுல், மாதம் 200 ருபாய்க்குமேலே கிடைக்கவில்லை. பெயர்; உக்கிரபாண்டியத்தேவர் என்றும்: இலங்கை அகதி என்றும்; சொல்லி வருகிறேன்" என்ருன்.

"சரிதான்! அப்படித்தான் சொல்ல வேண்டும்! பழைய வீரபாண்டியன் நீதான் என்பதை காட்டிக் கொள்ளாதே இதிருக்கட்டும்! சிவகிரி காட்டிலே கிடந்தானே அவன் யார்? என்ருர்.

"அவன், சேத்தூர் மடத்திலே படுத்திருந்த எவனே கொஞ்ச வயது சாமியாராம்! நம்ம சடையாண்டி கச்சிதமா முடித்திருக்கிருன்வேலையை!" என்ருர்.

"சரி! சரி!! மூச்சுவிடாதே! பத்திரமாக இருந்துகொண்டு. இந்தப் பக்கம் காங்கிரசுக்கு விரோதமா எவன் கிளம்பினுலும் கவனித்துக்கொள் — தெரிகிறதா?" என்ருர்.

"எனக்கு அதைவிட வேறே வேலை என்ன இருக்குது? ஒரு இரும்புக் கோட்டா ஏற்பாடு செய்தால் நல்லாயிருக்கும்!" என்ருன் அவன்.

"சரி கவனிப்போம்!" என்ருர் அவர்.

# அழகப்பா தமிழ் மன்றம்

## தமிழகக் கல்லூரி மாணவ மாணவியர் கவிதைப் போட்டி

வெற்றி பெறும் மாணவருக்கு. கவிஞர் கண்ணதாசன் தனது அன்னை விசாலாட்சி ஆச்சியின் நினைவுச் சின்னமாக வழங்கியிருக்கும் ரு. 550 பெறுமான உருள்கலன் பரிசளிக்கப் படும்

## கவிதைப்போட்டி விதிகள்

1. தமிழகக் கல்லூரிகளின் மாணவமாணவியர் அனைவரும்கலந்துகொள்ளலாம்.
2. கீழ் வருபவைகளுள் ஒன்றனைப் பற்றிப் பதினைந்து (15) பாக்கள் அல்லது அறுபது (60) வரிகள் எழுதியனுப்ப வேண்டும் (1) இன்பச்சுவை (2) அவலச்சுவை, (3) பெருமிதச்சுவை.
3. பா எந்த இனத்தைச் சேர்ந்ததாகவும் அமையலாம், யாப்பமைதி வழுவாமலும் பிறமொழிக் கலப்பில்லாமலும் இருத்தல் வேண்டும்.
4. கவிதைகள் முழு வெள்ளைத்தாளில் ஒருபுறத்தில் மட்டுமே மையினுல் எழுதப்பட்டிருக்க வேண்டும்,
5. கல்லூரித்தலைவரின் அல்லது தமிழ்ப் பேராசிரியரின் ஒப்பம் பெற்று அனுப்பல் வேண்டும்.
6. தனித்தாளில் மாணவரின் பெயர், படிக்கும் கல்லூரி வகுப்பு, முகவரி முதலியன எழுதி அனுப்புதல் இன்றியமையாதது.
7. கவிதைகள் ஆறு. மெய்யப்பன் 13. உமையாள் வீடுதி, செயலர், அழகப்பா தமிழ் மன்றம், காரைக்குடி-3. என்ற முகவரிக்கு 10-12-60 க்குள் அனுப்பபட வேண்டும்.
8. இப்போட்டிக்கு இரு பரிசுகள் உண்டு.
9. பரிசு பெறுகின்ற கவிதை தமிழ்நாட்டின் சிறந்த இதழ்களில் வெளியிடப் படும்.
10. வெற்றி பெறும் மாணவர் சார்ந்த கல்லூரிக்கு உருள்கலன் பரிசாகத் தரப்படும்.
11. வெற்றி பெறுகின்ற கல்லூரியின் சார்பில் உருள்கலனைப் பெறும் மாணவர் கல்லூரி முதல்வரிடமிருந்து உரிமைச்சீட்டு ஒன்றினைப் பெற்றுவர வேண்டும்.
12. உருள்கலனைப் பெறும் கல்லூரி முதல்வர் அக்கலனை செயலர், அழகப்பா தமிழ் மன்றம், காரைக்குடி-3, என்ற முகவரிக்கு 30-11-1961 அனுப்பி விடவேண்டும்-
13. இம்மன்றம் எடுக்கும் பொங்கல் விழாவின்போது பரிசுகள் வழங்கப்படும்.
14. பரிசுபெறுபவர்கள் வந்துபோவதற்கு வழிச்செலவுத் தொகையும்தரப்படும்.

# போய் வருகிறேன்!

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

என் அருமை நண்பர்களே!

இது அவனுக்குப் பழக்கமில்லாத ஒன்று.

இரகசியங்களைக் காப்பாற்றிக் கொள்ள அவனுக்குத் தெரியாது.

அதிலும், பத்துப்பேரின் கட்டளைக்குப் பயந்து தான் தவறென்று நினைப்பதைச் சரியென்று மாற்றிக் கொள்ள அவன் தயாராக இல்லை.

உங்கள் குழப்பம், அவனுக்குப் புரிகிறது.

நீங்கள் இதற்கெல்லாம் உட்பொருள் கற்பித்துக்கொண்டிருக்க வேண்டாம்.

பல காலமாக உள்ளடக்கிக் கொண்டிருந்த விஷயங்களைத் தான், மரணப் படுக்கையில் ஒருவன் சொல்லுவான்.

இது, அவனது மரணப்படுக்கையே!

இந்தப் படுக்கை அவனுக்குச் சம்மதமே.

பிரிவின் துயரம் அவனை உறுத்திக் கொண்டே இருந்தாலும், உங்கள் நலன் கருதியே அவன் புறப்படுகிருன்.

இனி, அவனை நீங்கள் எந்தப் பகுதியிலும் சந்திக்கமாட்டீர்கள்.

யாருடைய மாளிகையிலும் அவன் மணமகனுகக் காட்சி தரமாட்டான்.

வேறு எவனுடைய சந்நிதானத்திலும், அவன் பக்தனுக நிற்கமாட்டான்.

முடியுமானுல், அவன் பழைய பக்தர்களுக்குத் தெய்வமாக விளங்குவான்.

சோழச் சக்கரவர்த்தியின் மாளிகையைப்போல், பாடும் பாணர் கூட்டமும், பரிசில் பெறும் புலவர் கூட்டமும், நண்பர் கூட்டமும் நிறைந்த தன் கவிதை மாளிகையில், அவன் இனித் தத்துவக் கனவுகள் கண்டு கொண்டிருப்பான்.

தான் நினைக்கும் அனைத்தையும் உரத்த குரலில் பாடுவான்.

ஒவ்வொரு வார்த்தையையும் முத்துச் சரம்போல் கோர்ப்பான்.

உங்கள் இருதயத்தையும் காதுகளையும் அவன் தடவிக்கொண்டிருப்பான்.

பழைய பாணர் பரம்பரையில் ஒருவனுகவே அவன் தன்னை முடிவு கட்டிக்கொள்வான்,

அவன் எப்போதும் உங்கள் நண்பன்.

நீங்கள் அவனை மறந்துவிடலாம்.

நிச்சயமாக அவன் உங்களை மறக்க மாட்டான்.

எப்போதாவது தற்செயலாக நீங்கள் அவனைச் சந்திக்க நேர்ந்தால், அவன் கண்களிலே கண்ணீர் வரும்

அந்தக் கண்ணீர், அவன் மாறவில்லை என்பதைக் காட்டும்.

என் இனிய நண்பர்களே!

உங்கள் இருதயங்களை மூடிக் கொள்ளுங்கள்.

அடுத்த இதழில்
'போய் வருகிறேன்' 2.

# நாட்டுப் பிரிவினையை விரும்பாதவர்களுடன் கூட்டுச்சேர முடியுமோ?

முதல் பக்கத் தொடர்ச்சி

முன்னேற்றக் கழகம் 1962-ம் ஆண்டுத் தேர்தலில் பிரிவினை லட்சியத்தை ஒதுக்கி வைத்துவிடுவதென்றால் 1952-ம் ஆண்டுத் தேர்தலின் போதே இதனைச் செய்திருக்கலாம். இப்போதைவிட அப்போது காங்கிரசுக் கட்சியை அரசுக் கட்டிலிலிருந்து அகற்றிவிட அருமையான வாய்ப்புகள் அதிக அளவிலே இருந்தன. 1957-ம் ஆண்டில் வடவர் ஆதிக்கப்பற்றியும், தனி நாட்டுத் தேவையைபற்றியும் வலியுறுத்திய போது, வகையோடு மறுக்கத் தெரியாமல் வசை மொழிகளாலே நிந்தனை செய்திட்ட கம்யூனிஸ்டுகள், இந்த இடைக்காலமான மூன்றாண்டுகளில் ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னகம் வஞ்சிக்கப்படுவதைக் கண்டிக்கும் அளவுக்குத் தங்களின் கொள்கைகளை மாற்றிக் கழகத்தின் பாதைக்கு வந்துள்ளனர். அதனை வைத்துக் கணக்கிட்டால் பிரிவினை லட்சியத்தைப் பாதி அளவுக்கேனும் ஒப்புக்கொண்டுள்ளவர்கள். ஒப்புக்கொள்ள வேண்டியவர்கள், கம்யூனிஸ்டுகளே! அவர்கள்தான் நாட்டுப் பிரிவினை லட்சியத்தை தடையாகப் பயன்படுத்தக் கூடாதென்று தீர்மானம் செய்கிறார்கள். கழகத்தின் முயற்சிகள், இலட்சியங்கள், காலத்தின் வளர்ச்சிக்கேற்ப கண்ணியம் பெற்றுவருகின்றன. ஆனால் தங்களின் முயற்சிகளை மாற்றிக்கொண்டு செயல்படுகின்றவர்கள் கழகத்தின் இலட்சியத்தை ஒதுக்க வேண்டுமென்று குறிப்பிட்டுக் கேட்பது விந்தையான செய்தியாகவே உள்ளது!

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய பிரிவினை லட்சியத்தை ஒதுக்கிவைக்க வேண்டுமென்று விரும்புவதற்கு எடுத்துக் காட்டும் முக்கியமான காரணம், பிரிவினை லட்சியத்தில் ஒற்றுமைப் பண்பை ஏற்றுக்கொள்ளும் நல்லெண்ணம் கம்யூனிஸ்டுகள், சோசலிஸ்டுகள், பிரசா சோசலிஸ்டுகள், தமிழரசுக் கழகத்தவர் ஆகியவர்களிடத்தில் இல்லையாம். அதனால் கூட்டணியில் கழகம் பிரிவினையை வலியுறுத்தினால் அது பெருந்தடையாக அமைந்து விடுமாம்! இவர்கள் அத்தனைபேர்களுடனும் கழகம் தேர்தல் உறவு வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தன்னுடைய விடுதலைக் கொள்கையை விட்டுவிடாமல், ஆனால் காங்கிரசுக் கட்சியை எதிர்ப்பதற்கு மட்டும் விலை பேசிடவேண்டுமென்று தீர்மானித்துள்ள கம்யூனிஸ்டுகள் மேற்கண்ட கட்சிகளின் கொள்கைகளையும், நடைமுறைச் செயல்களையும், நன்கு கணக்கிட்ட பின்பு இந்த முடிவுக்கு வந்துள்ளார்கள் என்று நம்மால் நம்பமுடியவில்லை, அகில இந்திய அடிப்படையில் கம்யூனிஸ்டுகளுக்கும் பிரசா சோசிலிஸ்டுகளுக்கும் தேர்தல் கூட்டு, ஒற்றுமைப்பண்பு உள்ளதா? கேரளத் தேர்தலில் காங்கிரசுக் கட்சியுடன் உறவுவைத்துக் கொலுவீற்றுள்ளவர்கள் தமிழகத்தில் மட்டும்கம்யூனிஸ்டுகளுடன் உறவாடுவது சரியாகுமா? வடநாட்டிலேதான் எங்காவது காங்கிரசை எதிர்க்கக் கம்யூனிஸ்டுகளுடன் பிரசா சோசலிஸ்டுகள் ஒன்றுபடுகிறார்களா? பம்பாய் மாநிலத்து மராட்டிய சமிதியிலிருந்து கூட இருவரும் விலகிவிட்டார்களே! ஜே. பி. கிருபலானி என்ற பி. சோ. தலைவர் தன் கட்சியை விட்டே விலகி காங்கிரசுக் கட்சிக்குப் போய்விடுவார் என்று செய்திகள் வருகின்ற வேளையில், காங்கிரசை எதிர்க்கக் கம்யூனிஸ்டுகளுக்குத் துணையாக பிரசா சோசலிஸ்டுகள் வரமுடியுமா? வருவது நல்லதாகுமா? லோகியாவின் சோசலிஸ்டுகள் அகில இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்தில் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதும் கம்யூனிஸ்டுகளுக்குத் தெரியாத நிலவரமல்லவே! யாரைக் கூட்டணியின் பொறுப்பாளர்களாக அழைக்கப் போகிறார்கள்! வடநாட்டிலும் தென்னாட்டிலும் இருக்கும் அவர்கள் காங்கிரசுக் கட்சியை எதிர்க்கும் அளவுக்குத் தக்க வலிவு கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு ஏதேனும் சான்று உண்டா? தமிழரசுக் கழகம் ஒரு அரசியல்கட்சியல்ல, கலாச்சாரக் கழகமென்று அதன் தலைவர் எனப்படும் மீசைக்காரர் பலமுறை ஓசை கிளப்பிவிட்டார்! காங்கிரசின் கொள்கைகளை எப்போதும் எதிர்த்ததில்லை என்றும் மீண்டும அழைத்தால் சேர்ந்துழைக்கத் தடையில்லையென்றும் திருத்தணி விழாவில் காங்கிரசுக் கட்சியின் நிதியமைச்சர் ஒருவர் முன்னிலையில் வீர சபதம் எடுத்துக்கொண்டுள்ளார். மேலும் அவர் சுதந்திரத் தமிழகம் என்றும் சுய ஆட்சியென்றும் பாதிப்பிரிவினை கேட்கிறார். அவரையும் கூட்டிவைத்துக் காங்கிரசை எதிர்க்கலாம் என்று கம்யூனிஸ்டுகளால் நம்பமுடிகிறதா?

திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசுக் கட்சியை எதிர்ப்பதற்காக மட்டும் தன்னுடைய இலட்சியங்களையும் கொள்கைகளையும் வகுத்துக் கொண்டிருந்தால், தேர்தல்வேளையில் கம்யூனிஸ்டுகள் சொல்வதுபோல் செய்து விடலாம்! கம்யூனிஸ்டுகள் காங்கிரசுக்கட்சியைஎதிர்க்கும்பெரிய சக்தியாக தமிழரசுக் கழகத்தையும், குடியரசுக் கட்சி என்பதையும் கணக்கிட்ட அளவுக்கு சுதந்திராக்கட்சியினைக் கருதமுடியவில்லை! அந்தக் கட்சிக்குள்ளே இன்றிருக்கும் பல காங்கிரசுச் சீர்திருத்தச் செம்மல்களைச் சென்றதேர்தலில் கம்யூனிஸ்டுகள் மிகத் தீவிரமாக ஆதரித்தார்கள் என்பதை மறந்துவிட்டார்கள். காரைக்குடி கணேசன் அதிலே முதல்தரமான கதாநாயகன், அவர்தான் இன்று சுதந்திராக்கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவர்! ஆனால் கோவைத் தீர்மானம் சுதந்திராக் கட்சி போன்ற பிற்போக்காளரைத் தனித்து ஒதுக்கவேண்டும் என்று வேண்டியிருக்கிறது. கம்யூனிஸ்டுகளுடனும் மற்றக்கட்சிகளான காங்கிரசு ஆதரவாளர்களுடனும் கழகம் அணி அமைக்க வேண்டுமானால் பிரிவினை லட்சியத்தைக் கைவிட்டு ஒத்துழைக்கவேண்டுமென்றால், கம்யூனிஸ்டுகள் தங்களுடைய முதலாளி தத்வக்கொள்கை எதிர்ப்பினை விட்டுவிடவேண்டாம், காங்கிரசை எதிர்ப்பதற்காக மட்டும் சுதந்திராக் கட்சியினையும் கூட்டணியில் சேர்த்துக் கொள்வதற்காக ஒதுக்கி வைத்துவிட்டு தடையை நீக்கிவிட முன்வர முடியுமா? இல்லையெனில் ஏன் முடியாது என்பதையும், அது ஆகாதசெயல் எனில் முன்னேற்றக் கழகம் மட்டும் தன்னுடைய இலட்சியத்தை ஒதுக்கி வைப்பது எப்படி இயலும்? என்பதையும் முன்னேற்றக் கழகத்தவர் கேட்டுத் தெரிய விரும்புவது தவறாகுமா? காங்கிரசுக் கட்சியின் மக்கள் விரோதப் போக்கை முறியடிக்கவும், அதனை எதிர்க்கவும் முன்னேற்றக் கழகத்தின் மூலக் கொள்கையை தடையாகக் கணக்கிடும் கம்யூனிஸ்டுகள், சுதந்திராக் கட்சியின் காங்கிரசு எதிர்ப்புக் கொள்கைகளையும் பயன்படுத்திக் கொள்ளத் தடையாக இருக்கும் நிலை உண்டாக்காமல் ஒதுக்கி வைத்துவிட வேண்டுமே தவிர, அது மட்டும் முடியாது முன்னேற்றக் கழகம்தான் பிரிவினையை மறந்துவிட வேண்டும் என்று கேட்பது எந்த வகையில் ஏற்கத்தக்க தத்துவமாகும்? கம்யூனிஸ்டுகளும் காங்கிரசுக்காரர்களும் ஒரே திசையில் ஒரே படகில் பயணம் செய்கிறார்கள் என்று சுதந்திராக்கட்சி சொல்கிறது. கழகத்தின் ஒத்துழைப்புக்குத் தன் சுகவாழ்வைப் பலியிட்டுக் கொண்டு பிரிவினை லட்சியத்திற்குத் தன் ஒப்புதலைத் தரப்போவதில்லை ஒத்துழைப்பையும் பெறப்போவதில்லை! எனவே கழகம் தன்னுடைய தேர்தல் நிலையின் மிகச்சிறந்த ஆய்வுரைக்குப்பின் முன்னாட்களில் செய்திருப்பது போலவே இப்போதைய தேர்தல் காலத்திலும் தன்னுடைய உயிர் லட்சியத்திற்கு ஊறு ஏற்படா வண்ணம் காத்துக்கொள்ள வேண்டும்?

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேண்டுதல் விடுத்த கம்யூனிஸ்டுகள், எல்லாக் கொள்கைப பிரச்னைகளையும் எடுத்து மறைத்து விட்டுக் காங்கிரசு கட்சியின் ஆதிக்க ஒழிப்பைமட்டும் முக்கியமாகக் கணக்கிட்டுத் தங்களது வேண்டுகோளை ஆழ்ந்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்து இருக்கிறார்களாம். முதலமைச்சர் காமராசரின் சவாலுக்கு எதிர்க் கட்சிகள் தர வேண்டிய பதில் எல்லோரும் ஒன்றாகச் சேருவதுதான் என்றுகூடத் தலையங்கம் ஒன்று தந்துள்ளது தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டு ஏடு! காமராசருடைய சவாலைக் கண்டு கம்யூனிஸ்டுகள் மிகவும் கவலைப் படுவதாகத் தெரிகிறது. ஏனெனில் கவலைப்படவும் கலக்கப்படவுமான நிலையிலே இருப்பவர்கள் அவர்கள்! கழகத்தைப் பொறுத்த வரையில் கவலைப்படக் காரணமில்லை. சென்ற தேர்தலில் கம்யூனிஸ்டுகளையும் காங்கிரசுக்காரர்களையும் கடுமையான முறைகளில் எதிர்த்துப் பணியாற்றிய பிறகுதான் வெற்றிச் செய்திகளைப் பெற்றது. 1962 தேர்தலிலும் கழகம் தன்னுடைய பெரு முயற்சிகளைக் குவித்துக் காட்டி வெற்றியைப் பெற்றுக்கொள்வதை எவரும் தடுத்துவிட இயலாதென்பதைக் கம்யூனிஸ்டுகளைக் காட்டிலும் கவனமாகவே காங்கிரசுக்காரர்கள் கணக்கிட்டுவிட்டார்கள். அதனால்தான் இப்போதே காமராசர்களும் கக்கன்களும் அலறும் குரலுடன் அலைந்து திரிகிறார்கள்! காமராசருடைய பேச்சைக் கேட்டதும் அவருடைய சவாலைக் கண்டு எதிர்க் கட்சிகளை ஆதரிக்கும் மக்கள் மனம் மாறிவிடுவார்கள் என்று காமராசர் எதிர்பார்ப்பதைக்காட்டிலும், கீழ்த்தரமாக உள்ளது கம்யூனிஸ்டுகள் இப்படியெல்லாம் நடைபெற்றுவிடும் என்று எண்ணிக் கலங்குவது. குறைந்த பட்சத் திட்டமென்றும், எதிர்க் கட்சிகளின் அணிவகுப்பு என்றும் கம்யூனிஸ்டுகள் தந்துள்ள அழைப்புக் குரல் பலவகைகளில் சந்தேகக் குரலாகவே அமைந்து விட்டது. முன்னேற்றக் கழகம் தன்னுடைய மூலக் கொள்கையினை மறந்துவிட வேண்டுமென்று கம்யூனிஸ்டுகள் சொல்வதை மூளை கோளாறு உள்ளவர்கள்கூட ஒப்புக் கொள்ளமாட்டார்கள்! இந்தக் கொள்கையினைப் பேசிக்கொண்டே கம்யூனிஸ்டுகளைக் காட்டிலும் அதிகமான வெற்றி பெற்றவர்கள் முன்னேற்றக் கழகத்தவர்கள்! இந்தக் கொள்கைகளை கழகத்தை எதிர்ப்பது கடமையென்று கருதி சென்ற தோதலில் தோற்றவர்கள் கம்யூனிஸ்டுகள், இதனை அவர்களது மத்தியக் கமிட்டியே வேதனையுடன் ஒப்புக் கொண்டுள்ளது, காங்கிரசை எதிர்க்கத் துணிந்திடும் கட்சியினர் எண்ணிப் பார்க்கட்டும்!

★

வெண்பாப் போட்டி-10.

★

ஈற்றடி :

புலிநடுங்கித் தஞ்சம் புகல்

இறுதி நாள் 19-11-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

# வெண்பாப் போட்டி

## வஞ்சனை யாளர் வடக்கு.

நாட்டிலுயர் தென்றலே நந்தமிழர் நல்லுணர்வை
ஊட்டிவரும் உன்கொள்கை உள்ளதுவோ--போட்டியினர்
நெஞ்சமென ஆய்ந்தறிய நீதந்த ஈற்றடியோ
வஞ்சனை யாளர் வடக்கு.

—தமிழ்த் தென்றல், காங்கேயம்.

எட்டி பழுத்தென்ன; ஏற்றமொடு கற்றுழை
மொட்டு விரித்தென்ன; முட்டாள்பின்--பட்டொழுகும்
மைஞ்சன் இருந்தென்ன; வாழ்ந்தென்ன போயென்ன
வஞ்சனை யாளர் வடக்கு.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

சிந்திரி ரூர்கேலா சித்தாஞ் சன்பிலாய்
பந்தியில் ஓரம் பயில்வடவர்--பைந்தமிழ்
நெஞ்சத்தார் தெற்கை நினையார் கனவிலுமே
வஞ்சனை யாளர் வடக்கு.

—இரா. நெடுஞ்செழியன், வாணியம்பாடி.

பஞ்சப்பேய் மன்னவனைப் பட்டினிப்பேய் மத்திரியாய்
லஞ்சப்பேய் செங்கோலாய் ஆட்சிசெயக்--சஞ்சியின்றி
நெஞ்சுருகிச் சாகின்றார் மக்களிங்கே; நேர்மையற்ற
வஞ்சனை யாளர் வடக்கு.

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன்கோட்டை.

பாராள்வோர் தென்னவரைப் பாரா திருத்தற்கோ
வாரிக் கொடுத்தோம் வரிப்பணத்தை ?--மார்தட்டி
அஞ்சாமல் நாமெல்லாம் ஆர்த்தெழுந்தால் வீழாதோ
வஞ்சனை யாளர் வடக்கு.

—செங்குட்டுவன், திருமுதுகுன்றம்.

கொஞ்சுதமிழ்ச் சீரிளமை கொன்றே அழித்திட
மிஞ்சாமல் இந்தியைநம் மேல்திணிக்க--அஞ்சாதே
நஞ்சினும் தீமைசேர் நெஞ்சினர் வாழ்ந்திடும்
வஞ்சனை யாளர் வடக்கு.

—ஏ. இலக்குமி, வாத்தலைக்காடு.

ஈழகத்தில் அஞ்சலட்டை ஏற்றுள்ள செந்தமிழை
வாழகத்தில் இவ்வடவர் வைக்க--மறுத்திட்டார்
வஞ்சித்து வாழும் மதிகேடர் பாசறைதான்
வஞ்சனை யாளர் வடக்கு.

- வில்லவன் கோதை, காஞ்சி.

டஞ்சம் பலபார்த்தேன்; பண்புடனே நானிருந்தேன் !
சஞ்சிக் கொருவழியும் காணுதே--அஞ்சாமல்
தஞ்சமாய் நான்வந்தேன் தங்கு தடையின்றி
வஞ்சனை யாளர் வடக்கு.

—மு தங்கவேலன், ஆமதாபாத்.

நிமிர்ந்தமற நெஞ்சும், நிலைத்தகுறிக் கோளும்
அமைந்திடப் பெற்றவர் ஆகி--இமைத்திடுங்
கொஞ்சப் பொழுதிற் கொதித்தெழுந்தால் வீழாதோ
வஞ்சனை யாளர் வடக்கு.

- திண்டுக்கல்லான்.

எண்டிசையும் தன்கொடியை ஏற்றி அரசாண்ட
தண்டமிழ்நா டின்று தலைசாய--அண்டிவந்து
நெஞ்சுரம் இல்லாமல் நேர்மையிலார் வாழ்திசையே
வஞ்சனை யாளர் வடக்கு.

—அ. குமாரசாமி, துத்திக்காடு.

பஞ்சம் பசியென்று பட்டினியாற் பட்டழிந்து
துஞ்சி மடிகின்றோம் ! தொல்குடியோர்--நஞ்சதனை
நெஞ்சிருத்தி நம்மை நெறிடுத்திடுவர் ! நேர்மையிலா
வஞ்சனை யாளர் வடக்கு.

- இரா. இளமுருகு, தடாகம்.

மந்திகளின் கூச்சல் மருவி மொழியாகி
இந்தியெனும் பேரில் இலங்குவதைப்--புந்தியின்றி,
வஞ்சமிலார் தெற்கில் வலம்கொணரப் பார்க்கிறதே
வஞ்சனை யாளர் வடக்கு.

—கூடலன்பன், உப்புக்கோட்டை.

கொஞ்சு தமிழ்பேசிக் கொள்கையின் காவலராய்
விஞ்சு புகழ்கொண்ட வீரர்நாம்--அஞ்சியஞ்சிப்
பஞ்சமும் பட்டினியும் பார்த்தேங்க வைத்ததடா
வஞ்சனை யாளர் வடக்கு.

— செ. செயராமன், திருச்சி.

தஞ்சமென வந்தோர் தரணியெலாம் ஆளுகின்றார்
நெஞ்சில் உரங்கொண்டு நீவிரட்டு !--நஞ்சரவைக்
கொஞ்சி மகிழாதே ! கொந்தும் கொடும்பாம்பே
வஞ்சனை யாளர் வடக்கு.

—கோ. சோ. ஜெயபால், தெற்குப் பொய்கைநல்லூர்

முன்னாள் தமிழகத்தின் மூவேந்தர் வீரத்தோ
டின்னாள் எழூஉம் இனஉணர்ச்சி--தென்னகத்தார்
நெஞ்சினிலே ஊறின் நினைத்தஉடன் தூளாகும்
வஞ்சனை யாளர் வடக்கு.

—பே. சா. தனராசு, நாமக்கல்.

மண்வளமும் பொன்வளமும் மங்காத் தமிழ்வளமும்
எண்ணளவில் ஏராளம் இங்கிருந்தும்--காண்பதில்லை.
நெஞ்சில் இனித்திடும் நம்நாட்டின் செல்வத்தை
வஞ்சனை யாளர் வடக்கு.

— சி. அ, பெரியசாமி. மம்காபுரம்.

திட்டத்தால் நாட்டைத் திடமாக்கும் பேறுற்றோர்
இட்டத்தால் நம்வாழ்வை இன்னலுறத்--தட்டிவிட்டுப்
பஞ்சம்சூழ் மக்களாய்ப் பாரதத்தில் சேர்த்தாளும்
வஞ்சனை யாளர் வடக்கு.

—சௌதாராணி, மதுரை.

கூடுகட்டி முட்டையிடா; குஞ்சும் பொரித்தறியா;
ஈடுஈடாய்த் தன்னினத்தின் எண்பெருக்கும்--பாடுபடும்
அஞ்சனக் காகத்துக்(கு) அக்குயிலே நம்மவர்க்கு
வஞ்சனை யாளர் வடக்கு.

—அருந்ததி, அமிர்தராயன்கோட்டை

வெஞ்சமரால் பாராண்ட வீரர் பரம்பரையாய் !
துஞ்சியது போதும் துடித்தெழுவாய் !--இங்குநம்
நெஞ்சம் கொதிக்க நிதம்சுரண்டி வாழுதடா
வஞ்சனை யாளர் வடக்கு.

—பாப்பா, காமாட்சிபுரம்.

செல்வ வளத்தாலும் சேலத் திரும்பாலும்
மல்கு திராவிடம் மாண்புறுமால்;--கல்விமிகு
அண்ணா வழிசென்றே ஆள்வோர்க் குணர்த்திடுவோம்
வஞ்சனை யாளர் வடக்கு,

—மு. அ வருசை இபுருகிம். செய்தங்கநல்லூர்.

உண்மையற்றோ ராட்சி ஒழிகின்ற நாள்வரைக்குந்
திண்மையற்றுத் தேய்ந்திருக்குந் தென்னாடு--வண்மையுற்று
மிஞ்சுபெருஞ் செல்வமுற்று மேன்மையுற்று வாழுமந்த
வஞ்சனை யாளர் வடக்கு.

—சு. தவசியானந்தப், அருப்புக்கோட்டை.

சிங்கத் தமிழரெலாம் சீற்றம் மிகக்கொண்டு
பொங்கி எழுந்தேவெம் போரிட்டால் !--இங்குவந்து
தஞ்சம் புகுந்தே தமிழர்தம் தாள்தாங்கும்
வஞ்சனை யாளர் வடக்கு.

—"இருங்கைநகரான்" மேலைச்சிவபுரி.

வயிற்றுக்குக் கஞ்சி மறைக்கவோர் கந்தை
துயின்றெழவோர் சின்னக் குடிசை--துயரிவைதான்
நஞ்சனையார் ஆட்சியிலே நாமேது கண்டோம்
வஞ்சனை யாளர் வடக்கு.

—பொதுநல்லத்தான், ஏழுமலைக் காலனி.

அஞ்சாண்டுத் திட்டங்கள் அத்தனையும் அங்கேதான் !
நெஞ்சதனில் நாம்நினைந்தால் நீள்நெருப்பே--வஞ்சியே!நல்
பஞ்சணையிற் சாய்ந்துநம்மைப் பாதையிலே வாடவைத்த
வஞ்சனை யாளர் வடக்கு.

—செ. பெ. வீராசாமி, இடையைப்பட்டி.

ஆசிரியர் : கண்ணதாசன், அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83610.